நக.எண். 553/2019 மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம்
நாள்: 29.07.2019 நாகப்பட்டினம்.

## கூட்ட நடவடிக்கைகள்

**மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் 29.07.2019 அன்று மாலை 05.00 மணி அளவில் முனைவர், சீ. சுரேஷ் குமார், இ.ஆ.ப. மாவட்ட ஆட்சித் தலைவர், நாகப்பட்டினம் அவர்களது தலைமையில் நடைபெற்ற மாவட்ட சுற்றுச்சூழல் திட்டம் தயாரித்தல் குழு கூட்ட நடவடிக்கை.**

பொருள்: கூட்டம்-நாகப்பட்டினம் மாவட்டம்-மாவட்ட அளவிலான சுற்றுச்சூழல் திட்டம் தயாரித்தல்-குழு கூட்டம் நடைபெற்றமை-தொடர்பாக.

பார்வை: 01. மாண்புமிகு பசுமை தீர்ப்பாயம் வழக்கு எண்.720-713/2017/ உத்தரவு நாள் 15.07.2019.
02. முதன்மைச் செயலளர்/தலைவர் (FAC), தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், சென்னை அவர்களின் நேர்முக கடித எண்.தநமகவா/திட்டம் மற்றும் வளர்ச்சி/கோ.எண்.018454/2019 நாள் 26.07.2019.

**கூட்ட நடவடிக்கைகள்.**

மாண்புமிகு பசுமை தீர்ப்பாய வழக்கு எண்.720-713/2017 உத்தரவு/நாள் 15.07.2019-ன்படி, நாகப்பட்டினம் மாவட்டத்தில் திடக் கழிவு மேலாண்மை, மருத்துவக் கழிவு மேலாண்மை, பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை, கட்டுமானம் மற்றும் இடிமான கழிவு மேலாண்மை, இலக்கு எட்டப்படாத 102- நகரங்கள், மாசு பட்ட ஆற்றுப்படுகைகள், மாசுபட்ட தொழிற் பகுதிகள், தொழிற்சாலைகள் மாசு தடுப்பு , சுத்திகரிப்பு செய்யப்பட்ட அன்றாட கழிவு நீரின் மறு உபயோகம், மணல், சுரங்கம் மற்றும் நீர்நிலைகளை பாதுகாத்தல் தொடர்பாக மாவட்ட சுற்றுச்சூழல் திட்டம் தயாரிப்பின் முதல் கூட்டமானது 29.07.20149 அன்று மாலை 05.00 மணி அளவில் மாவட்ட மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்றது. அக்கூட்டத்தில் கீழ்கண்ட உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

| வ.எண். | அலுவலர்களின் பதவி | குழு விபரம் |
|---|---|---|
| 01 | மாவட்ட ஆட்சியர், நாகப்பட்டினம் | தலைவர் |
| 02 | மாவட்ட வருவாய் அலுவலர், நாகப்பட்டினம் | உறுப்பினர் |
| 03 | சார் ஆட்சியர், நாகப்பட்டினம் | உறுப்பினர் |
| 04 | மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (ஊரக வளர்ச்சி ), நாகப்பட்டினம் | ஒருங்கிணைப்பாளர் |
| 05 | நகராட்சி நிர்வாக மண்டல இணை இயக்குநர், தஞ்சாவூர் | உறுப்பினர் |
| 06 | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், நாகப்பட்டினம் | உறுப்பினர் |
| 07 | உதவி இயக்குநர், (பேரூராட்சிகள்) நாகப்பட்டினம் மாவட்டம். | உறுப்பினர் |
| 08 | உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) நாகப்பட்டினம் | உறுப்பினர் |
| 09 | நகராட்சி ஆணையர், நாகப்பட்டினம்/மயிலாடுதுறை/சீர்காழி மற்றும் வேதாரண்யம் | |
| 10 | செயற்பொறியாளர், பொதுப்பணித் துறை, நாகப்பட்டினம் | உறுப்பினர் |
| 11 | உதவி இயக்குநர், கனிமம் மற்றும் சுரங்கம், நாகப்பட்டினம் | உறுப்பினர் |
| 12 | இணை இயக்குநர் பொது சுகாதாரம், நாகப்பட்டினம் | உறுப்பினர் |
| 13 | துணை இயக்குநர், பொது சுகாதாரம், நாகப்பட்டினம் | உறுப்பினர் |
| 14 | பொது மேலாளர், மாவட்ட தொழில் மையம், நாகப்பட்டினம் | உறுப்பினர் |
| 15 | உதவி இயக்குநர், மீன்வளத் துறை, நாகப்பட்டினம். | உறுப்பினர் |

ஆய்வு:

மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், நாகப்பட்டினம் மாவட்டத்திற்கான மாவட்ட சுற்றுச்சூழல் திட்டம் தயாரிப்பின் அவசியத்தை மேற்கொள்ளுதல் தொடர்பாக தகுந்த விபரங்களுடன் அந்தந்த துறை வாரியாக விபரங்களை அளிக்க வேண்டியதன் அவசியத்தை பற்றி விரிவாக எடுத்துரைத்தார்.

மேலும் மாவட்ட ஆட்சியர் அவர்கள், மாவட்ட சுற்றுச்சூழல் திட்டம் இம் மாவட்டத்தில் செயல்படுத்துதல் தொடர்பாக விரிவாக விவாதித்து திட்டம் தயாரிப்பு பணிகளை தயாரிக்குமாறு கேட்டுக்கொண்டதுடன், கீழ் கண்ட பொருள் தொடர்பாக தொடர்புடைய அலுவலர்கள் திட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தினார்.

| வ.எண். | மாவட்ட சுற்றுச்சூழல் திட்டம் தயாரிப்பு விபரம். | நடவடிக்கை மேற்கொள்ள வேண்டிய துறை | திட்ட நடவடிக்கை |
|---|---|---|---|
| 01 | திடக் கழிவு மேலாண்மை | உதவிய இயக்குநர் (பஞ்சாயத்து), உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்), நகராட்சி நிர்வாக மண்டல இணை இயக்குநர், மற்றும் அனைத்து நகராட்சி ஆணையர்கள். | உள்ளாட்சி அமைப்புகள் தற்போது மேற்கொள்ளப்படும் திடக்கழிவு மேலாண்மையை திடக்கழிவு மேலாண்மை விதி 2016-ன்படி, எதிர்காலத்தில் மேற்கொள்வதற்கு வேண்டிய புதிய தொழில் நுட்பத்துடன் கூடிய நடவடிக்கையின் அறிக்கையை 15 தினங்களுக்குள் தயாரித்து அளிக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| 02 | மருத்துவ திடக் கழிவு மேலாண்மை | இணை இயக்குநர் (சுகாதார பணிகள்) மற்றும் துணை இயக்குநர் (சுகாதார பணிகள்) | மருத்துவ திடக் கழிவு மேலாண்மை விதி -2016-ன்படி, மருத்துவ கழிவின் அளவினையும், அதனை முறையாக வெளியேற்றுவது மற்றும் மருத்துவ மேலாண்மை விதி-2016- யை நடைமுறைப் படுத்தல் தொடர்பாக 15 தினங்களுக்குள் தயாரித்து அளிக்க வேண்டும். |
| 03 | பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை | உதவிய இயக்குநர் (பஞ்சாயத்து), உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்), நகராட்சி நிர்வாக மண்டல இணை இயக்குநர், மற்றும் அணைத்து நகராட்சி ஆணையர்கள். | பிளாஸ்டிக் மேலாண்மை விதி -20016-ன்படி, பிளாஸ்டிக் கழிவுகள் தற்போது எவ்வாறு உபயோகப்படுத்தப்படுகிறது என்றும் எதிர்காலத்தில் இவ் பிளாஸ்டிக் கழிவுகளை முறையாக கையாளுவது தொடர்பான எதிர்கால திட்டம் பற்றிய விபரத்தினை 15 தினங்களுக்கு தயாரித்து அளிக்க வேண்டும். |
| 4 | கட்டுமானம் மற்றும் இடிமான கழிவு மேலாண்மை (கட்டுமானம் மற்றும் இடிமானம்) | உதவி இயக்குநர் (ஊராட்சிகள்), உதவி இயக்குநர், பேரூராட்சிகள் மற்றும் அணைத்து நகராட்சி ஆணையர்கள். | கட்டுமானம் மற்றும் இடிமான கழிவுகள் முறையாக கையாளுவதற்கு தொடர்பான உரிய நடவடிக்கை விபரத்தினை 15 தினங்களுக்குள் தயாரித்து அளிக்க வேண்டும். |
| 5 | காற்று மாசில் இலக்கு எட்டாத 102- நகரங்கள் | பொருந்தாது. | நாகப்பட்டினம் மாவட்டத்திற்கு பொருந்தாது. |
| 6 | ஆற்றுப்படுகையில் ஏற்படும் மாசு | உதவி இயக்குநர், (ஊராட்சிகள்), உதவி இயக்குநர், பேரூராட்சிகள்) அணைத்து நகராட்சி ஆணையர்கள் மற்றும் செயற்பொறியாளர், பொதுப் பணித்துறை/நீர் வள ஆதார பிரிவு | அனைத்து உள்ளாட்சி அமைப்புகளும், காவிரி படுகையினை பாதுகாக்கும் பொருட்டு, அங்கீகரிக்கப்படாத திரவ மற்றும் திடக்கழிவுகளை வெளியேற்றுவதையும் நீர்நிலைகளில் கொட்டுவதையும் தடுப்பதற்கான எதிர்கால நடவடிக்கை விபரத்தினை 15 தினங்களுக்குள் அளிக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| 7 | மாசு பட்ட தொழிற்சாலை பகுதிகள். | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் | மாசு பட்ட தொழிற்பகுதிகளை அறிந்து அவற்றில் செயல்படும் தொழிற்சாலைகள் கையாளப்படவேண்டிய மாசு கட்டுப்பாடு சாதனைங்கள் குறித்து அறிக்கையை 15 தினங்களுக்குள் அளிக்க வேண்டும். |
| 8 | தொழிற்சாலைகள மாசு தடுப்பு | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் | தற்போதுள்ள தொழிற் நுட்பத்தினை பயன்படுத்தி மாசினை கட்டுப்படுத்தும் தொழிற்சாலைகளின் விபரத்தினையும் மேலும் மாசு வினை முற்றிலுமாக தடுக்க எடுக்க வேண்டிய நடவடிக்கை விபரத்தினையும் தயார்செய்து 15 தினங்களுக்குள் அறிக்கையினை அளிக்க வேண்டும். |
| 9 | சுத்திகரிப்பு செய்யப்பட்ட அன்றாட கழிவு நீரின் மறு உபயோகம். | அனைத்து நகராட்சி ஆணையர்கள். | உள்ளாட்சி அமைப்புகள் மூலம் உருவாக்கப்பட்டு இயக்கத்தில் உள்ள அன்றாட பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களிலிருந்து வெளியேற்றப்படும் சுத்திகரிப்பு செய்யப்பட்ட கழிவு நீரை, விஞ்ஞான முறைப்படி மறு உபயோகம் செய்வதற்கான தேவையான நடவடிக்கைகள் தயார் செய்து 15 தினங்களுக்குள் அறிக்கை அளிக்க வேண்டும். |
| 10 | கனிமம் மற்றும் சுரங்கம் | உதவி இயக்குநர், கனிமம் மற்றும் சுரங்கம். | தற்போதுள்ள நடைமுறையில் உள்ள பகுதிகளில் ஏற்படும் சுற்றுச்சூழல் தாக்கத்தினை கண்டறிய மேற்கொள்ளப்படும் விபரத்தினை 15 தினங்களுக்கு அளிக்க வேண்டும். |
| 11 | நீர் நிலைகளை பாதுகாத்தல் | செயற் பொறியாளர் பொதுப்ப பணித் துறை-நீர் வள ஆதாரத் துறை/நீர் வள ஆதார பிரிவு. | நீர் நிலைகளை பாதுகாப்பது தொடர்பான விரிவான விபரத்தினை 15 தினங்களுக்குள் அளிக்க வேண்டும். |

இறுதியாக மாவட்ட ஆட்சியர் அவர்கள் அனைத்து துறை அலுவலர்களிடம் மேற்கண்ட சுற்றுச்சூழல் திட்டம் குறித்த தங்கள் துறை சார்ந்த அறிக்கையினை மாண்புமிகு பசுமை தீர்ப்பாயம் ஆணையில் குறிப்பிட்டுள்ளபடி, மாவட்ட சுற்றுச்சூழல் திட்டம் தயாரிப்பதற்கு சமர்பிக்கும்படி கேட்டுக் கொண்டார்.

கூட்ட முடிவில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நன்றி கூற கூட்டம் முடிவுற்றது.

மாவட்ட ஆட்சித் தலைவர்
நாகப்பட்டினம்.

பெறுநர்:

தொடர்புடைய அணைத்து அலுவலர்கள்.

நகல்:

01. தலைமைச் செயலாளர், தமிழ்நாடு அரசு, சென்னை-9-அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து சமர்பிக்கப்படுகிறது.
02. முதன்மைச் செயலாளர்/தலைவர் (FAC), தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், சென்னை -32 அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து சமர்பிக்கப்படுகிறது.